அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 6

நேரம்: 120 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 16

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடி இடுக.

1. பண்பாட்டின் உயர்வைக்காட்டும் கூறு
   - [ ] தொழில்
   - [ ] நாகரிகம்
   - [ ] மக்கள்

2. ஆடுகள் புல்லை மேய்ந்தன. இச்சொல்லியத்தின் பயனிலை
   - [ ] ஆடுகள்
   - [ ] புல்லை
   - [ ] மேய்ந்தன

3. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவை
   - [ ] முத்தமிழ்
   - [ ] மூவிடம்
   - [ ] முக்காலம்

4. பறவையின் சொண்டு
   - [ ] அலகு
   - [ ] அழகு
   - [ ] அளகு

5. அவனா? என்பதில் வந்துள்ள வினா எழுத்து
   - [ ] னா
   - [ ] அ
   - [ ] ஆ

6. இலையின் பழுத்துவிட்ட நிலை
   - [ ] துளிர்
   - [ ] பழுப்பு
   - [ ] சருகு

7. அம்மம்மாவின் தாயார்
   - [ ] பெரியம்மா
   - [ ] பாட்டி
   - [ ] பூட்டி

8. தாய்க்குத் தந்தை. அதுபோல அரசனுக்கு
   - [ ] அரசி
   - [ ] தோழி
   - [ ] ஒருத்தி

9. மகிழ்ச்சி என்பதன் ஒத்தபொருட் சொல்
   - [ ] மனம்
   - [ ] துன்பம்
   - [ ] உவகை

10. மிக முந்தைய வரலாற்றுக் காலத்தில் தமிழர் வாழ்ந்த இடம்
    - [ ] ஆபிரிக்கக் கண்டம்
    - [ ] குமரிக்கண்டம்
    - [ ] அமெரிக்கக் கண்டம்

11. வெளிச்சம், புகழ், மறைத்தல் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
    - [ ] ஆழி
    - [ ] ஒளி
    - [ ] பார்

12. மரம் + வேர் என்பதைச் சேர்த்து எழுதினால்
    - [ ] மரம்வேர்
    - [ ] மாவேர்
    - [ ] மரவேர்

13. ஆழிக்குமரன் ஆனந்தனின் இயற்பெயர்

☐ செல்வகுமார் ☐ பாலகுமார் ☐ நந்தகுமார்

14. முக்கனிகளுள் ஒன்று

☐ தோடை ☐ மாதுளை ☐ பலா

15. "தாய்ப்பாலில் கலந்த மொழி" என்ற பாடலை எழுதியவர்

☐ பாரதிதாசன் ☐ காசி ஆனந்தன் ☐ நா. முத்துக்குமார்

16. தமிழரது தனித்தன்மையான பண்பாடுகளுள் ஒன்று

☐ பொருள் ☐ மானம் ☐ போட்டி

17. தேடினான் என்ற சொல் கூறும் காலம்

☐ இறந்தகாலம் ☐ நிகழ்காலம் ☐ எதிர்காலம்

18. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும்

☐ துஞ்சு ☐ நஞ்சு ☐ பஞ்சு

19. நாளிதழ் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

☐ நாள் + இதழ் ☐ நாழி + இதழ் ☐ நாளி + இதழ்

20. அண்மை என்பதன் எதிர்ப்பொருட் சொல்

☐ தூய்மை ☐ சேய்மை ☐ பொறுமை

20x1 = 20 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொற்களின் திணை, பால், எண் என்பவற்றை எழுதுக.

| | | திணை | பால் | எண் |
|---|---|---|---|---|
| 1. | மாணவர்கள் | உயர்திணை | | |
| 2. | வீணை | | | |
| 3. | நடந்தான் | | | ஒருமை |
| 4. | பறந்தன | | | |

10 x1 = 10 புள்ளிகள்

## 3 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.

பாடினான் | சென்றார்கள் | நடுவோம் | வளர்த்தனர் | செய்தாள்

1. தமிழினி வீட்டுவேலைகளைச் ____________________.
2. நாவலன் இனிமையாகப் பாட்டுப் ____________________.
3. அவர்கள் விலங்ககத்துக்குச் ____________________.
4. தமிழர் சங்கங்கள் அமைத்துத் தமிழை ____________________.
5. நாங்கள் மரங்களை ____________________.

5x2 = 10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

| ஐக்கிய இராச்சியம் - கனடா | பிரான்சு | நோர்வே |
|---|---|---|
| 1. Clothes | 1. Le vêtement | 1. Klær |
| 2. Medicine | 2. Le médicament | 2. Medisin |
| 3. Fire | 3. Le feu | 3. Ild |
| 4. Radio | 4. La radio | 4. Radio |
| 5. Peacock | 5. Le paon | 5. Påfugl |

**இத்தாலி**

1. Vestito
2. medicina
3. Fuoco
4. Radio
5. Pavone

**நெதர்லாந்து**

1. Kleding
2. Medicijn
3. Vuur
4. Radio
5. Pauw

**டென்மார்க்**

1. Tøj
2. Medicin
3. Ild
4. Radio
5. Påfugl

**சுவீடன்**

1. Kläder
2. Medicin
3. Eld
4. Radio
5. Påfågel

**பின்லாந்து**

1. Vaate
2. Lääke
3. Tuli
4. Radio
5. Riikinkukko

**தமிழ்**

1.
2.
3.
4.
5.

5x2 = 10 **புள்ளிகள்**

## 5 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஈழத்தின் வேறு பெயர்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

2. தமிழரது பண்பாட்டை அறிய உதவுபவைகளுள் ஒன்றை எழுதுக.

_______________________________________________

3. பாவேந்தரது படைப்புகளுள் இரண்டை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

4. நாட்டார் பாடல் வகைகளுள் ஒன்றை எழுதுக.

_______________________________________________

5. தனிச்சொல்லியம் ஒன்று எழுதுக.

_______________________________________________

6. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   1. சினைப்பெயர்: _______________________________
   2. தொழிற்பெயர்: _______________________________

7. ஈழத்தில் உரிமை மீட்புக்காக உண்ணா நோன்பிருந்து தம்முயிரை ஈந்தவர்களுள் ஒருவரது பெயரை எழுதுக.

_______________________________________________

5x2 = 10 புள்ளிகள்

## 6 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தாத்தா வைத்த தென்னையுமே
தலையால் இளநீர் தருகிறது.
பாட்டி வைத்த கொய்யாவும்
அளவில்லாமல் காய்க்கிறது.
அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது.
சின்னஞ் சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வளர்ப்பேனே.

- அழ.வள்ளியப்பா

1. தென்னை எப்படி இளநீரைத் தருகிறது?

___

2. பாட்டி வைத்த கொய்யா எவற்றைக் கொடுக்கிறது?

___

3. முருங்கையை வைத்தவர் யார்?

___

4. அளவில்லாமல் காய்ப்பது எது?

___

5. செடியை நட்டு வளர்ப்பவன் யார்?

___

5x2 = 10 புள்ளிகள்

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழிலக்கிய வரலாறு
2. மாமன்னன் எல்லாளன்
3. எனது நண்பர்கள்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - நல்ல நண்பர்கள்
   - நண்பர்களின் ஒற்றுமை
   - நண்பர்களால் கிடைக்கும் நன்மைகள்
4. நான் விரும்பும் தொழில்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - விரும்பும் தொழில் - அதற்கான காரணம்
   - தொழிற்கல்வி
   - பெறப்படும் நன்மைகள்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

அழகியற் கலைகளை நுண்கலைகள் என்றும் அழைப்பார்கள். ஆடல், இசை, ஓவியம், சிற்பம், நாடகம் என்பன அழகியற் கலைகளாகும். இவற்றுள் ஓவியக் கலையானது பார்ப்போர் மனங்களைக் கவர்வதுடன் குழந்தைகள் விரும்பும் ஒரு கலையாகவும் விளங்குகிறது. ஒரு கருத்தைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளிப்படுத்துவதை விட ஓவியத்தால் மிகத் தெளிவாக விளக்கலாம். வரலாறுகளை ஆவணப்படுத்தவும் ஓவியங்கள் உதவுகின்றன. நாம் உந்துகளில் செல்லும்போது சுவர்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்களைக் காண்கின்றோம். ஓவியங்கள் காலத்தால் அழியாதவை. இயற்கையினது அழகைப் 'புனையா ஓவியங்கள்' என்று கவிஞர்கள் கூறுவார்கள். தமிழரது ஓவியக்கலைக்குச் சித்தன்னவாசல் குகை ஓவியங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

1. அழகியற் கலைகளுள் இரண்டை எழுதுக.

______________________________

______________________________

2. இயற்கை அழகைக் கவிஞர்கள் எவ்வாறு கூறுவார்கள்?

______________________________

______________________________

3. தமிழரது ஓவியக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குபவை எவை?

______________________________

______________________________

4. ஓவியங்கள் எதற்கு உதவுகின்றன?

______________________________

______________________________

5. நாம் உந்துகளில் செல்லும்போது எவற்றைக் காண்கின்றோம்?

______________________________

______________________________

5x2 = 10 **புள்ளிகள்**

**2. தரப்பட்டுள்ள அழைப்பிதழை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளம் இடுக.**

## விளையாட்டுப் போட்டி அழைப்பிதழ்

வணக்கம்.

பாரதி தமிழ்ப்பள்ளியில் மாவீரர் நினைவாக விளையாட்டுப் போட்டி நடைபெற உள்ளது. மாலதி, திலீபன், மில்லர் என மாவீரர்களின் பெயர்களைக் கொண்டு இல்லங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. தாயக விளையாட்டுகளும் இடம்பெறும். சிற்றுண்டிச்சாலையில் தாயக உணவுகளும் விற்கப்படும்.

காலம்: 14.06.2025 சனிக்கிழமை
நேரம்: 09:00 மணி
இடம்: பள்ளி விளையாட்டுத்திடல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1. இது ஆண்டுவிழா அழைப்பிதழ். ( )
2. போட்டியானது சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ( )
3. இது 10:00 மணிக்குத் தொடங்கும். ( )
4. சிற்றுண்டிச்சாலையில் தாயக உணவுகள் விற்கப்படும். ( )
5. தாயக விளையாட்டுகளும் இடம்பெறும். ( )

5x1 = 5 புள்ளிகள்

குறிப்பு:

குறிப்பு:

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |